# யா/கொக்குவில்
# ஸ்தான சி.சி.த.க பாடசாலை

# பரிசளிப்பு விழாவும் பாராட்டு விழாவும்
## 2011

காலம் : 09-11-2011 புதன்கிழமை

நேரம் : மு.ப 9.30 மணி

இடம் : வளர்மதி முன்பள்ளி மண்டபம்
சம்பியன்வீதி மாத்தனை முருகன் கோவில்
அருகாமை. கொக்குவில்.

தலைவர் : திருமதி. யோகலட்சுமி திரவியநாதன்
(பாடசாலை முதல்வர்)

பிரதம விருந்தினர் : திரு. யோ. இரவீந்திரன்
(யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர்)

சிறப்பு விருந்தினர் : திரு. பூ. குகதாசன்
(ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணம் கல்வி வலயம்)

கௌரவ விருந்தினர்: திரு. கு. அம்பிகைபாகன்
(கிராமசேவகர்)



திரு. ச. பாலசிங்கம்
(கிராமசேவகர்)

திருமதி. ராதை பாஸ்கரன் (ucmas)

# ஆசிச் செய்தி

**சின்மய மிஷன்,**
யாழ்ப்பாணம்.
04.11.2011.

யா/ கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலையின் பரிசளிப்பு விழாவும், பாராட்டு விழாவும் சிறப்பாக நடைபெறுவதற்கும், பாடசாலை சிறப்பாக நிரந்தரமான ஒரு இடத்தில் புதுப் பொலிவுடன் இயங்குவதற்கும் எல்லாம் வல்ல இறைவனும், பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரும் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கிறேன்.

அதிபருடைய பணிகள் தொடர எல்லாம் வல்ல இறைவன் ஆசீர்வதிப்பாராக.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

ஹரி ஓம்!

இறைபணியில்,

**பிரம் மச்சாரி ஜாக்ரத சைதன்யா**

# பரிசளிப்பு விழா நிகழ்ச்சி

பிரதம விருந்தினரை அழைத்துவரல்
மங்கள விளக்கேற்றல்
இறைவணக்கம்
மௌனப்பிரார்த்தனை (அமரர். திரு.S.துரைரட்ணம்)
வரவேற்பு நடனம்
ஆசிச் செய்தி
அதிபர் அறிக்கை
பேச்சு (ஆங்கிலம்)
குழுப்பாடல் (ஆங்கிலம்)
சிறப்பு விருந்தினர் உரை
வில்லிசை
"கும்மி நடனம்"
"ஆறுமுகமான பொருள்"
கௌரவ விருந்தினர் உரை
பிரதம விருந்தினர் உரை
பரிசில் வழங்கல்
நன்றியுரை

# அதிபர் அறிக்கை

விக்கினங்கள் தீர்த்தருளும் வினாயகப் பெருமானை வணங்கி, எல்லாம் வல்ல நயினை நாகபூசணி அம்பிகையின் பாதார விந்தங்களைப் பணிந்து போற்றி

வணக்கத்திற்குரிய மதப் பெரியோர்களே!

பெரும் மதிப்பிற்குரிய முதன்மை விருந்தினர் யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.யோ.ரவீந்திரன் அவர்களே!

சிறப்பு விருந்தினர் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிமனையின் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.பூ.குகதாசன் அவர்களே!

கௌரவ விருந்தினராக வருகைதந்திருக்கும் திரு.அம்பிகைபாகன் கிராம சேவையாளர் அவர்களே!

கௌரவவிருந்தினராக வருகை தந்திருக்கும் எமது பாடசாலையின் நலன்விரும்பியும் கிராமசேவையாளருமான திரு. பாலசிங்கம் ஐயா அவர்களே!

வளர்மதி நிறைவாழ்வகத்தின் போசகரும் முன்னாள் ஓய்வுபெற்ற அதிபருமான திரு.அ.பஞ்சலிங்கம் ஐயா அவர்களே!

ஏங்கள் நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் அவர்களே!

யாழ். வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் அவர்களே!

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களே!

இப் பாடசாலையின் முன்னாள் அதிபர்களே! ஆசிரியர்களே!

அபிவிருத்திக்குழு, அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே!

பழைய மாணவர்களே!

அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே!

அன்புக்குரிய எமது ஆசிரியர்களே!

மாணவச் செல்வங்களே!
உங்கள் அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்!

யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலை 1880ல் ஆரம்பிக்கப்பட்டும் இதுவரை நீண்ட காலமாக பரிசளிப்பு விழா நடைபெற்றதற்கான ஆதாரங்கள் எமக்கு கிடைக்கவில்லை. இன்றைய நாள் பரிசளிப்பு விழாவும், பாராட்டு விழாவும் வைப்பதற்கு இறைவன் அருள் கூடி நிற்பது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

பெருமதிப்பிற்குரிய பிரதம விருந்தினர் அவர்களே!
எமது பாடசாலையின் வரலாற்றுச் சிறப்பு மிக்க முதலாவது பரிசளிப்பு விழாவிலே உங்களது வருகை எங்கள் பாடசாலைக்கு பெருமை சேர்த்து நிற்கிறது.

பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திரு.யோ.ரவீந்திரன் அவர்கள் தமது கல்வியை யா/ உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியிலும், யா/ காட்லிக் கல்லூரியிலும் கல்வி பயின்றார். விஞ்ஞானப் பட்டதாரியான இவர் சிறப்பு மிக்க யா/ வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் கடமையாற்றி கல்வி முதுமாணிப் பட்டத்தைப் பெற்றார். 1989ம் ஆண்டு கல்வி நிர்வாகப் பரீட்சையில் சித்தியடைந்து யாழ் கல்விப் பணிமனையில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதினொரு வருடமாக கடமையாற்றி தற்போது யாழ். கல்விப்பணிப்பாளராக எமது பிரதேசத்தில் கல்வித்தர அபிவிருத்தியினூடாக தரமான சமுகத்தினைப் படைக்க அளப்பரிய சேவைகளை ஆற்றிவருகின்றார். இவர் இன்றைய நாளில் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பிப்பது பெருமை சேர்க்கிறது.

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.பூ.குகதாசன் அவர்களே!
தாங்கள் ஆரம்பக்கல்வி பயிலும் அனைத்து மாணவர்களையும் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக்குவதற்காகவும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அனைத்து மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெறச் செய்ய வேண்டுமென்று அரும்பாடுபட்டு வலயத்திலுள்ள அனைத்து ஆரம்பக்கல்லி ஆசிரியர்களுக்கும் உரிய செயலமர்வுகளையும் உரிய மேற்பார்வைகளையும் வழங்கியுள்ளீர்கள். இதனை அனுசரித்த நாங்கள் இன்று உங்கள் இலக்கை நிறைவேற்றியுள்ளோம். அந்த வகையில் எமது பாடசாலை 11 மாணவர்கள் பரீட்சையில் தோற்றி மூன்று மாணவர்கள் சித்தி பெற்றும் ஆறு மாணவர்கள் 143 - 104 வரையான புள்ளிகளைப் பெற்றும் இரண்டு மாணவர்கள் 89 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். இந்நிலையில் எமது மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாராட்டுவதற்காக தாங்கள் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருப்பது பெருமைக்குரிய விடையமாகக் கருதுகின்றோம்.

கௌரவ விருந்தினர் அவர்களே!
கிராம சேவையாளர் திரு.கு.அம்பிகைபாகன் அவர்கள் எங்கள் பாடசாலை அயலில் குடியிருந்து எங்களிற்கு ஒரு ஊக்குவிப்பாளராகவும் உதவிக்கரம் நீட்டுபவராகவும் இருக்கின்றார். உங்களுடைய முயற்சியினால் பாடசாலைக்கு காணி ஒன்றினைப் பெற்றுத் தருவதற்கு அரும்பாடுபட்டு வருகிறீர்கள். பாடசாலையில் அபிவிருத்திக் குழுவிலுள்ள தாங்கள் பாடசாலையின் வளர்ச்சியை அறிந்து எம்முடன் இணைந்து சேவையாற்றி வருவது எமது பாடசாலைச் சமூகத்திற்கு பெரும் மகிழ்வைத் தருகின்றது.

கௌரவ விருந்தினர் திரு. ச. பாலசிங்கம் கிராம சேவகர் அவர்களே! தாங்கள் எங்கள் பாடசாலையின் J/124 பிரிவில் கிராம சேவையாளராக இருந்து கட்டாய வரவுக்குழு உறுப்பினராகவும் பாடசாலை அபிவிருத்திச் குழு உறுப்பினராகவும் இருந்து எமது மாணவர்களது கல்வி வளர்ச்சியில் எம்மோடு இணைந்து சேவையாற்றுவது எமக்கு பேருதவியாக இருக்கிறது.

கௌரவ விருந்தினர் திருமதி. ராதை பாஸ்கரன் அவர்களே!
UCMS அபகாஸ் துரித மனக்கணித நிறுவனத்தின் யாழ். மாவட்டத்திற்கான பொறுப்பாளராகிய நீங்கள் யாழ். மாவட்டத்தில் கடந்த சில தசாப்தங்களாக வீழ்ச்சி கண்டு வந்த கணிதபாடத் துறையானது இன்றைய காலகட்டத்தில் 5 வயது முதல் 13 வயது வரையான வயதுக்கட்பட்ட மாணவர்களின் துரித கணிதச் செய்கை முறை இன்று பாடசாலை மட்டங்களில் திறம்பட வெற்றி கண்டுவர இக் கணித வழிமுறையானது UCMAS பெரிதும் துணை புரிகின்றது என்பதை நிறைவேற்றி வரும் தாங்களும் உங்களது புதல்விகளான காயத்திரி, மாதங்கியும் எமது பாடசாலை அனைத்து மாணவர்களுக்கும் புத்தகப் பைகளை வழங்கியதுடன் 2010ல் இடம்பெயர்ந்து வந்த மாணவர்களுக்கான இழந்த கல்வியை மீட்டல் செயற்றிட்டத்திற்கான கற்றல் உபகரணங்களையும், வழங்கியதோடு எமது பாடசாலைக்கான மைக் ஸ்ராண்டையும் அன்பளிப்புச் செய்ததோடு வறுமைக்

கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கான உதவியை என்றும் செய்வதற்காக முன்வரும் தங்களை கௌரவ விருந்தினராக வரவேற்பதில் பெருமகிழ்வடைகிறேன். அத்தோடு பரிசளிப்பும் பாராட்டு விழாவிற்குமான அறிக்கையை அச்சிட்டு வழங்குவதற்குமான உதவியினை செய்துள்ளீர்கள். உங்களது வருகை எங்களது பாடசாலைக்கு பெருமை சேர்த்து நிற்கிறது.

இவ்வாறான ஒத்துழைப்பின் மத்தியிலே எமது பாடசாலையானது வளர்ச்சிப் பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது.

எமது பாடசாலையில் கற்க வருகின்ற மாணவர்கள் மிக வறுமைக்கோட்டின் கீழும் பல்வேறு நெருக்கடிக்குள்ளான சூழலிலிருந்தும் வருகின்றார்கள். இவர்களுக்கு கல்வி புகட்டுவது மிகச் சிரமமான காரியம். இவர்களின் அன்புத் தேவை, காப்புத் தேவை, கணிப்புத் தேவை என பல்வேறு தேவைகளை நிறைவேற்றி விட்டுத்தான் கற்பித்தலில் ஈடுபட வேண்டும். எனவே எமது ஆசிரியர்கள் மிகவும் சிரமத்தின் மத்தியில்தான் கற்பித்தலில் ஈடுபடுகின்றனர். வினைத்திறன் மிக்க கற்றல் கற்பித்தலூடாக ஆசிரியர்களினதும் மாணவர்களனிதும் ஆக்கத்திறனாய்வு மிக்க வகையில் சிந்திப்பதற்கு பயிறுவித்தல் என்ற இலட்சிய நோக்கூடாக எங்களது ஆசிரியர்கள் மாணவர்களது தனியாள் வேறுபாடு, குடும்ப நிலை நன்கறிந்து தரமான கல்வியினூடாக தரமான சமூகத்தை உருவாக்குவதற்கு அரும்பாடுபட்டு புதிய மாற்றங்களையும் சவால்களையும் எதிர்கொண்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் மாணவர்களது கற்றலானது மகிழ்ச்சிகரமாக அமைகின்றது. மாற்றுவலுவுள்ளோருக்கும் விசேடமுறையில் கவனிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையிலும் எமது பாடசாலை அனைத்துப் போட்டிகளிலும் பங்கு பற்றுகின்றது. கோட்டமட்ட, வலய மட்ட போட்டிகளில் ஆரம்பப் பிரிவில் வெற்றியும் பெற்றுள்ளனர்.

மாணவர்களை செழிப்பு மிக்க சிந்தனையாளராக உருவாக்குகின்ற தூர நோக்கு அடிப்படையில் எமது பாடசாலை முன்னோக்கிச் செல்கின்றது என்பதை புலமைப் பரிசில் பரீட்சையில் 100% சித்தி சான்றாக அமைகின்றது. எமக்கு பக்கபலமாக நின்று கல்வி வளர்ச்சிக்காக கைகொடுப்பவர்கள் புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், மற்றும் இங்கு வாழும் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பாடசாலைச் சுற்றாடலில் உள்ளவர்கள் என்பதை இந்த வேளையில் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

எமது பாடசாலையின் பழைய மாணவரும் தொல்புரம் விக்கினேஸ்வரா பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபருமான திரு. மு.ஜெயக்குமார் அவர்கள் பாடசாலையில் வருடாந்த பரிசளிப்பு விழா கொண்டாடப்பட வேண்டும் என்று 24-07-2009ல் ஆலோசனை வழங்கி அதற்காக வருடாவருடம் 8000/- ரூபா தருவதாக கூறி பரிசுக்காக 6000/- வும் உபசரணைக்கு 2000/- ரூபாவும் பயன் படுத்துமாறு ஆலோசனை வழங்கியுள்ளார். 2009 ல் மாணவர்களது கல்வித் தர மேம்பாடு குறித்து கூடிய கவனமெடுக்க வேண்டியுள்ளதால் 40 மாணவர்களிற்கும் துரித கணித செய்கைப் பயிற்சிப் புத்தகம் போட்டோ பிரதி எடுத்து ஆசிரியர்களின் மேலதிக கவனிப்பில் பயிற்சி அளிக்கப்பட்டு இன்று மாணவர்களின் தோ்ச்சி மட்டம் உயர்ந்து நிற்கின்றது. இதற்காக திரு. மு. ஜெயக்குமார் அதிபர் அவர்கட்கு எமது பாடசாலைச் சமூகம் சிரம் தாழ்த்தி நிற்கின்றது.

அவ்வுறுதி உரைக்கமைய இவ்வாண்டும் 8000/- பெறுமதியான பரிசுப்பொருள்களை வழங்கி இவ் விழாவை வருடாவருடம் கொண்டாட வழிவகுத்த இவரை சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ்ந்து கல்விச் சமூகத்திற்கு சேவையாற்ற எல்லாம் வல்ல நயினை நாகபூசணி அம்மனை வேண்டுகின்றோம்.

நோர்வேயில் வசிக்கும் எமது பழைய மாணவர் திரு.திருமதி. சிவானந்தம் அவர்களுக்கும், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் எங்கள் பாடசாலைக்கு ஆற்றி வரும் சேவையினால் இன்று கல்வியில் தரமான மாணவர்களை உருவாக்கி பரிசளிப்பு விழா நடாத்துவதற்கு காரணமாக அமைந்துள்ளார்கள் இந்த வேளையில் அவர்களையும் அவர்கள் குடும்பத்தாரையும் பெருமையுடன் நினைவு கூருகின்றோம்.

மேலும் எமக்கு கொக்குவில் மேற்கைச் சேர்ந்தவரும் அவுஸ்ரேலியாவில் வசிப்பவரும் பாடசாலையின் நலன் விரும்பியுமாகிய திரு. தேவசகாயம் நடனகுமார் அவர்களின் அனுசரணையுடன், திரு.திருமதி. சுப்பிரமணியம் பவளம் இரட்ணசபாபதி அவர்கள் வழங்கிய ரூபா 100,000/- ஆரம்ப நிதியம் ஒன்றை 27-10-2011ல் ஆரம்பிப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றது என்பதனை மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன்.

யா/ கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலையானது 1880ல் கொக்குவில் பரிசுத்த விருத்துவ ஆலயத்தினால் வணக்கத்திற்குரிய சம்பியன் அடிகளால் ஆரம்பிக்கப்பட்டது. "கல்வியே அழியாத செல்வம்" என்ற மகுட வாசகத்தைக் கொண்ட பாடசாலை ஆனது தரம் 01 தொடக்கம் 05 வரை வகுப்புகளைக் கொண்டது. விசேட தேவையுடைய மாணவர்களையும், வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த கல்வியை மீட்கவேண்டிய மாணவர்களை உள்வாங்கி அறிவை ஊட்டுவதை விட அறியாமையை அகற்ற அரும்பாடு பட்டுவரும் ஆசிரியர் குழாத்திற்கு பாடசாலைப் பயனாளிகளின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாத ஒன்றாகக் காணப்பட்டு வருகிறது.

**எமது பாடசாலையின் பயனாளிகள்**

வளர்மதி நிறை வாழ்வகம்
கொக்குவில் பரிசுத்த திரித்துவ ஆலயம்
SOND நிறுவனம்
மனதுருக்கம் அமைப்பாளர்
Leads நிறுவனத்தினர்
UCMAS இயக்குனர் திருமதி.ராதை பாஸ்கரன்
நல்லூர் லயன்ஸ் கழகம்
ருலிங்ஸ் நிறுவன இயக்கனர் திரு.S.உருத்திர லிங்கம்
பகவான் சத்திய சாயி மத்திய நிலையம் திருநெல்வேலி
சிம்மய மிசன் உறுப்பினர்கள்
முருகன் ஸ்ரோஸ் உரிமையாளர்
மக்கள் வங்கி திருநெல்வேலிக் கிளை
கொக்குவில் பிரதேச சபை
பிரதேச செயலாளர் திரு.செந்தில்நந்தன், பிரதேச செயலகம் நல்லூர்.
வலயக்கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்
திருவாளர் M. சுந்திரசேகரம், முகாமையாளர்
திரு.வே.அன்பழகன், ஆசிரியர் யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை
பழைய மாணவர் திரு. S.சிவானந்தம், அவரது பிள்ளைகளும் (நோர்வே)
திரு.எஸ்.மனோகரன் (ஜேர்மனி)
திரு.திருமதி கந்தையா விஜயராசா (பாக்கியா) குடும்பத்தினர் (கனடா)
திரு. சுப்பிரமணியம் பவளம் இரட்ண சபாபதி (பரிசளிப்பு நிதியம்)
திரு. தேவசகாயம் ஜெயக்குமார், ஆசிரியர்
திரு. தேவசகாயம் நடனகுமார் (அவுஸ்ரேலியா)
திரு.சண்முகநாதன் சுதாகர், முன்னாள் ஆசிரியர்
திருமதி சொ. மகேஸ்வரநாதன், ஓய்வுபெற்ற ஆசிரியர்.
ஒருபானை அமைப்பின் அமைப்பாளர்கள்.

டாக்டர். டான். முத்துவேலு ஐயா அவர்கள், அவருடன் இணைந்து பணியாற்றும் திருமதி S.அனுசா தேவி
கொக்குவில் லயன்ஸ் கழகம்.
கொக்குவில் மேற்கு சனசமுக நிலையம்.
எமது பாடசாலை அயலில் வசிக்கும் நலன்விரும்பும் அன்பர்கள்.

உங்கள் எல்லோரையும் எமது பாடசாலைச் சமூகம் வருக வருக என இருகரம் கூப்பி வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறது.

எமது பாடசாலையில் கடமையாற்றிச் சென்ற முன்னைய அதிபர்கள்
1963ம் ஆண்டு இப் பாடசாலை அரசினால் பொறுப்பேற்கப்பட்டது.

1. ஆரம்பப் போதகர் வணக்கத்திற்குரிய சம்பியன் அடிகள்
2. திரு. சுப்பிரமணியம் உபதேசியார்.
3. திரு. S. மயில்வாகனம்
4. திரு. எ. மயிலு (உபதேசியார்)
5. திருமதி பாக்கியம் அலெக்சாண்டர்
6. திரு. S. முத்துத்தம்பி
7. திரு. S. சுப்பிரமணியம்
8. திரு. S. ஞானரட்ணம்
9. திரு. ச. கந்தையா
10. திரு. நா. ஜெயனொளிபவன்
11. செல்வி . க .கதிர்காமலிங்கம்
12. திருமதி. யோகலட்சுமி திரவியநாதன்

(கிடைத்த தகவல்களின்படி)

**யா/ கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலையின் ஆசிரியர் விபரம்**

அதிபர் - திருமதி. யோகலட்சுமி திரவியநாதன் B.Com(Hons) M.Ed.
திருமதி கார்த்திகா கமிலஸ்குணநாதன் Primary Tri.
திருமதி தயாளினி அன்னலிங்கம் Engl.Tri
திருமதி தவதேவி சிவசோதிநாதன் Primary(Tri)
திருமதி வதனா பிறைசூடி Primary(Tri)
திருமதி சத்தியதேவி கிருபாகரன் Primary(Tri)
செல்வி தியாகராசா தேவராணி B.sc (Dip)(In.Ed)
செல்வி வித்தியகலா சண்முகலிங்கம் B.A தொண்டர் ஆசிரியர்

**தற்காலிக இணைப்பில் உள்ளோர்**

செல்வி சுகந்தா புஸ்பசிங்கம் ஆரம்பக்கல்வி
திருமதி லோகேஸ்வரி மகேந்திரன் ஆரம்பக்கல்வி

**எமது பாடசாலையிலுள்ள இல்லங்கள்**

கந்தையா இல்லம் - சிவப்பு
ஜெயனொளிபவன் இல்லம் - நீலம்
சம்பியன் இல்லம் - பச்சை

**எமது பாடசாலையிலுள்ள மன்றங்கள்**

இந்துமாமன்றம் - பொறுப்பாசிரியர்
திருமதி. கு.கமிலஸ்குணநாதன்
தலைவர் -தே. தேவஅனோஜன்

செயலாளர்- உ.தினுசாந்

தமிழ் மன்றம் - பொறுப்பாசிரியர்
திருமதி. த. சிவசோதிநாதன்
தலைவர் - சு.மனோஜிகா
செயலாளர் - ஸ்ரீசத்தியன்

சுற்றாடல் மன்றம் - பொறுப்பாசிரியர்
திருமதி. ச. கிருபாகரன்
தலைவர் - இ. கேதுசன்
செயலாளர் - உ. தினுசாந்

**மாணவர்களுக்கான சேமிப்புக் கணக்கு பாடசாலை வங்கிச் சேவை**

1. ஹற்றன் நசனல் வங்கி (யாழ்ப்பாணம், திருமதி கா. காமிஸ்குணநாதன்)
2. மக்கள் வங்கி (திருநெல்வேலி, திருமதி. சத்தியதேவி கிருபாகரன்)
3. தேசிய சேமிப்பு வங்கி ( கொக்குவில் அஞ்சலகம், திருமதி. வ. பிறைசூடி)

## பரிசில் வழங்குவோர்

**பரிசளிப்பு விழாவில் பரிசில் பெறும் தகமையுடைய அனைத்து மாணவர்களுக்குமான பரிசில்களை வழங்குவோர் பழைய மாணவர் திரு. மு. ஜெயக்குமார் [ஓய்வு பெற்ற அதிபர்]**

**புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில்களை அன்பளிப்புச் செய்தோர் விபரம்**

1. வளர்மதி நிறைவாழ்வகம் 1000 ரூபா பணவைப்பு, பதக்கம் 3000/=
2. பழையமாணவர் திருமதி தவராணி சிவானந்தன் (நோர்வே) 2000/= படி 6000/=
3. பழைய மாணவர் திரு. மு. பாஸ்கரன் (மகாலட்சுமி தேனீரகம்) 1000/= படி 3000/=
4. புலமைப்பரிசில் விசேட பரிசு - அமரர் சகாதேவன் நிலக்ஷன் ஞாபகார்த்த விசேட பரிசில் (2011வருடாவருடம் சித்தியடையும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படும)
5. நலன் விரும்பிகள் திரு திருமதி கந்தையா விஜயராசா பாக்கியா 1000/= படி3000/=
   திரு.மு.ஜெயக்குமார் தலா 500=/படி 1500/=
6. புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற அனைத்து மாணவர்களுக்காக திரு.திருமதி.கந்தையா விஜயராசா பாக்கியா (கனடா)
7. தரம்1 தரம்2 மாணவர்களுக்கான விசேட பரிசு- 32 மாணவர்களுக்காக விசேட தேவையுடையோருக்கான பரிசு- 5பேர்- திரு.திருமதி கந்தையா விஜயராசா (பாக்கியா)
8. திருமதி ராதை பாஸ்கரன் பரிசளிப்பு விழா அறிக்கை வெளியீடு.
9. பரிசளிப்பு விழா சிற்றுண்டி உபசரணை.திரு திருமதி சுகந்தா சதீஸ்குமார் ஆசிரியர்
10. தரம்5 புலமைப்பரிசில் வகுப்பாசிரியருக்கான ஊக்குவிப்பு பரிசு பாடசாலைசமூகம்.
11. விசேட பரிசு : திரு.திருமதி இராசலிங்கம், குளொப் ரேடர்ஸ், வவுனியா.

# பொதுப்பரீட்சையில் 2011 [1ம், 2ம் தவணை] பரிசு பெறுவோர் விபரம்

| மாணவர் பெயர் | தரம் | நிலை |
|---|---|---|
| தேவராசா நிகேதனன் | 1 | 1 |
| அருணகிரிநாதன் வேணுஜன் | 1 | 2 |
| இலங்கைநாதன் பிரசாந் | 1 | 3 |
| ரவிச்சந்திரன் துவிகாசன் | 2 | 1 |
| நாகரூபன் நிதுஷா | 2 | 2 |
| மார்க்கண்டு சுதர்மன் | 2 | 3 |
| சுதன் ஆரணி | 3 | 1 |
| கேதீஸ்வரன் கவிதா | 3 | 2 |
| நாகநாதன் அமிர்தபாசினி | 3 | 3 |
| லிங்கேஸ்வரன் நிருஷன் | 4 | 1 |
| இராசேந்திரம் டிலக்சனா | 4 | 2 |
| சுந்திரசேகரம் தனுர்வித்தியா | 4 | 3 |
| சுபாஸ்கரகுகமூர்த்தி மனோஜிகா | 5 | 1 |
| ஸ்ரீராமச்சந்திரன் சத்தியன் | 5 | 2 |
| ரவீந்திரன் துஷாந்தினி | 5 | 3 |

## மாணவர் வரவொழுக்கம்

1. தரம் 1 - மகேஸ்வரன் கேதுசன்
2. ,, 2 - ரவிச்சந்திரன் துவிகாசன்
3. ,, 3 - ரவீந்திரன் கோபிராஜ்
4. ,, 4 - உதயகுமார் ஜெனோசாந்
5. ,, 5 - ரவீந்திரன் துஷாந்தினி

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளி விபரம்

1. சுபாஸ்கரகுகமூர்த்தி மனோஜிகா 171
2. ஸ்ரீராமச்சந்திரன் சத்தியன் 165
3. சொலமன் அருட்சோதி அபிநயா 153
4. சிவானந்தராசா விதுர்சன் 143
5. இலங்கைநாதன் கேதுஷன் 135
6. உதயகுமார் தினுசாந் 124
7. சந்திரகுமார் சாய்க்குமார் 122
8. ரவீந்திரன் துஷாந்தினி 119
9. நகுலேஸ்வரன் ஜதீசிகா 104
10. ஞானசேகரன் வக்சன் 89
11. ஸ்ரீதுரராஜன் சுபானுஜன் 89

# கோட்ட, வலயப் போட்டிகளில் பங்கு பற்றி பரிசு பெறுவோர் விபரம்

| மாணவர் பெயர் | நிகழ்வு | பிரிவு | பாடசாலை | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|---|---|
| அருணந்தி வேணுஜன் | **சித்திரம்** | 1 | 1 | 1 | 3 |
| சிவானந்தராசா திவ்வியா | | 2 | 1 | | |
| சிவலிங்கம் கவின்சன் | | 3 | 1 | | |
| சந்திரசேகரம் தனுர்வித்தியா | | 4 | 1 | 3 | |
| சொலமன் அருட்சோதி அபிநயா | | 5 | 1 | | |
| இலங்கைநாதன் பிரசாந் | **திருக்குறள்** | 1 | 1 | | |
| நாகரூபன் நிதுஷா | | 2 | 1 | | |
| சுதன் ஆரணி | | 3 | 1 | | |
| இராசேந்திரம் டிலக்சனா | | 4 | 1 | | |
| சுபாஸ்கரகுகமூர்த்தி மனோஜிகா | | 5 | 1 | | |
| நாகரூபன் நிதுஷா | **விரைவு கணிதம்** | 2 | 1 | | |
| நாகநாதன் அமிர்தபாஷினி | | 3 | 1 | | |
| இராசேந்திரம் டிலக்சனா | | 4 | 1 | | |
| சுபாஸ்கரகுகமூர்த்தி மனோஜிகா | | 5 | 1 | 5 | |
| அருணகிரிநாதன் மிதுசன் | **வாய்ப்பாடு** | 3 | 1 | | |
| இராசேந்திரம் டிலக்சனா | | 4 | 1 | | |
| உதயகுமார் தினுஷாந் | | 5 | 1 | 10 | |
| இராசேந்திரம் டிலக்சனா | **தமிழ்த் தினம்** | 4 | 1 | | |
| லிங்கேஸ்வரன் நிருஷன் | | 4 | 1 | | |
| உதயகுமார் தினுசாந் | | 5 | 1 | | |
| சுபாஸ்கரமூர்த்தி மனோஜிகா | | 5 | 1 | | |
| இலங்கைநாதன் கேதுசன் | | 5 | 1 | | |
| சொலமன் அருட்சோதி அபிநயா | | 5 | 1 | | |

**விசேட பரிசு**

| | | |
|---|---|---|
| தரம்5 சு. மனோஜிகா | - | வலய மட்டம் 1ம் இடம் மிதிவெடி விழிப்புணர்வு வினாடி வினாப் போட்டி |
| க.தட்சாயினி | - | தொடர்ந்து ஒவ்வொரு பிறந்த நாளிற்கும் மரம் நடுதலில் ஈடுபட்டமை |
| சிறந்தமாணவன் | - | உதயகுமார் தினுஷாந். |
| சிறந்தமாணவி | - | ரவீந்திரன் துஷாந்தினி |

**விசேட தேவையுடைய மாணவருக்கான பரிசு பெறுவோர்**

யோகுலன் அருண்யா
தர்மராசா யதுர்ஷன்
ரஞ்சித் றஜிதா
ஜெயபாலசிங்கம் ஜெனனி
லோகேஸ்வரன் நிஷா

# கோட்ட, வலயப் போட்டிகளில் பங்கு பற்றி பரிசு பெறுவோர் விபரம்

| மாணவர் பெயர் | நிகழ்வு | பிரிவு | பாடசாலை | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|---|---|
| | **ஆங்கில தினம்** | | | | |
| கதிர்காமநாதன் தாட்சாயினி | ஆ.உ றுப்பு | 3 | 1 | | |
| மகேஸ்வரன் கஜனி | 4 | 1 | | | |
| சுபாஸ்கரகுகமூர்த்தி மனோஜிகா | | 5 | 1 | | |
| சுதன் ஆரணி | வாசிப்பு | 3 | 1 | | |
| லிங்கேஸ்வரன் நிருஷன் | | 4 | 1 | | |
| உதயகுமார் தினுஷாந் | | 5 | 1 | | |
| இலங்கைநாதன் சங்கீதா | பாட்டு | 3 | 1 | | |
| சந்திரசேகரம் தனுர்வித்தியா | | 4 | 1 | | |
| இலங்கைநாதன் கேதுஷன் | | 5 | 1 | | |
| | **விளையாட்டுப் போட்டி** | | | | |
| இலங்கைநாதன் கேதுஷன் | 75mஓட்டம் | 5 | 1 | 1 | 4 |
| | **ஆங்கில தின குழுப் போட்டி** | | | | |
| சுபாஸ்கரமூர்த்தி மனோஜிகா | | 5 | 1 | 3 | |
| சொலமன் அருட்சோதி அபிநயா | | 5 | | | |
| ரவீந்திரன் துஷாந்தினி | | 5 | | | |
| நகுலேஸ்வரன் ஐதீசிகா | | 5 | | | |
| சந்திரகுமார் சாய்க்குமார் | | 5 | | | |
| ஸ்ரீராமச்சந்திரன் சத்தியன் | 5 | | | | |
| உதயகுமார் தினுஷாந் | | 5 | | | |
| சுப்பிரமணியம் நிதர்சனா | | 3 | | | |
| நாகநாதன் அமிர்தபாசினி | | 3 | | | |
| சுதன் ஆரணி | | 3 | | | |
| தேவஜோசன் தேவஅனோஜன் | | 3 | | | |
| சாந்தகுமார் விஷ்ணுப்பிரியன் | | | | 3 | |
| அருணகிரிநாதன் மிதுஷன் | | 3 | | | |
| இலங்கைநாதன் கேதுசன் | | 5 | | | |
| இலங்கைநாதன் சங்கீதா | | 3 | | | |
| சந்திரகுமார் சறோமி | | 4 | | | |

# கோட்ட, வலயப் போட்டிகளில் பங்கு பற்றி பரிசு பெறுவோர் விபரம்

| மாணவர் பெயர் | நிகழ்வு | பிரிவு | பாடசாலை | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|---|---|
| | **ஆங்கிலப் பாடல்** | | | | |
| லயனிசா விஜயானந்தம் | | | | 3 | 1 |
| ராசேந்திரம் பிரதீபன் | | 5 | 1 | 3 | |
| லிங்கேஸ்வரன் நிருஷன் | | 4 | 1 | | |
| | **சிறுவர் நாடகக் குழு** | | | | |
| மார்க்கண்டு சுதர்மன் | | 2 | 1 | 4 | |
| ரஞ்சித் விதுஷன் | **அனுசரணை** | 3 | | | |
| நாகநாதன் அமிர்தபாசினி | MITEL | 3 | | | |
| சந்திரகுமார் சாய்க்குமார் | திரு.M.சந்திரசேகரம் | 5 | | | |
| சந்திரகுமார் சரோமி | | 4 | | | |
| ரஞ்சித் பிரசாந் | | 4 | | | |
| உதயகுமார் ஜெனோசாந் | | 4 | | | |
| லிங்கேஸ்வரன் நிருஷன் | | 4 | | | |
| சுபாஸ்கரகுகமூர்த்தி மனோஜிகா | | 5 | | | |
| உதயகுமார் தினுஷாந் | | 5 | | | |
| சொலமன் அருட்சோதி அபிநயா | | 5 | | | |
| ரவீந்திரன் துஷாந்தினி | | 5 | | | |
| நகுலேஸ்வரன் ஜதீசிகா | | 5 | | | |
| ஸ்ரீராமச்சந்திரன் சத்தியன் | | 5 | | | |
| இராசேந்திரம் பிரதீபன் | | 5 | | | |
| சிவானந்தராசா விதுர்சன் | | 5 | | | |
| | **வில்லிசை குழு** | | | | |
| மார்க்கண்டு சுதர்மன் | | 2 | | | |
| ரஞ்சித் பிரசாத் | | 4 | | | |
| ரவிச்சந்திரன் துஷிகாசன் | | 2 | | | |
| நாகரூபன் நிதுஷா | | 2 | | | |
| புவனேஸ்வரன் ஷரணியா | | 2 | | | |
| புவனேந்திரன் டில்க்கா | | 2 | | | |

# இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

| மாணவர் பெயர் | நிகழ்வு | பிரிவு |
|---|---|---|
| **விளையாட்டுப்போட்டி வெற்றிக் கிண்ணம்** | | |
| 6 வயதுப்பிரிவு | | |
| தேவஜோன்சன் தனுசன் | | 6 |
| ஜசிக்கா | | 6 |
| துவாரகா | | 6 |
| 7 வயதுப்பிரிவு | | |
| உதயகுமார் மோகனராஜ் | | 7 |
| புவனேந்திரன் டில்க்கா | | 7 |
| சிவானந்தராசா திவ்யா | | 7 |
| 8 வயதுப் பிரிவு | | |
| நஞ்சித் விதுஷன் | | 8 |
| சுப்பிரமணியம் நிதர்சனா | | 8 |
| 9 வயதுப்பிரிவு | | |
| நஞ்சித் பிரசாந் | | 9 |
| ராசேந்திரம் டிலக்சனா | | 9 |
| 10 வயதுப்பிரிவு | | |
| இலங்கைநாதன் கேதுஷன் | | 10 |
| சொலமன் அருட்சோதி அபிநயா | | 10 |
| சுபாஸ்கரகுகமூர்த்தி மனோஜிகா | | 10 |

# எமது பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தோர் விபரம்

| பெயர் | பொருட்கள் |
|---|---|
| RUHLINS | U.P.S கணனி |
| திருமதி. ச. வத்சலா (இலண்டன்) | |
| திருமதி. ச. வத்சலா (இலண்டன்) | பிளாஸ்ரிக் கதிரை, கிணற்று மூடி - 1 |
| | வகுப்பறை மேசை 4 |
| ஜெயக்குமாரி யோகநாதன்(கனடா) | வகுப்பறை மேசை - 1 |
| நயினாதீவு நாகதீபஜமகாவிகாரை | அம்புலி வயர் மைக் செற் - 1 |
| வே.அன்பழகன்ஆசிரியர் | A3 Laminator - 1 |
| லிங்கேஸ்வரன் நிருஷன் | CD/MP3/USP player |
| | T.T வயர் 60m |
| M. சந்திரசேகரம் | AUD-59 LR Micro phone |
| ச. சிவனேசன்(நோர்வே) | கொடித்தம்பம் -5 |

| | |
|---|---|
| சி. சுரேஸ்(நோர்வே)<br>S. மனோகரன்(ஜேர்மனி)<br>LEADS<br>ஞா. இராஜேந்திரகுமார்<br>அ. மாலதி<br>மு. மகேந்திரராசா<br>S. இளங்கீரன்<br>S. குகராசா<br>ம. சர்மிளா<br>திருமதி ராதை பாஸ்கரன் | சில்வர் சமையல் பாத்திரங்கள்<br>உருக்கு அலுமாரி சிறியது - 3<br>முதலுதவிப் பெட்டி<br>சம்பியன் கிண்ணம் (சிறியது 2)<br>சம்பியன் கிண்ணம் (சிறிது 1)<br>சம்பியன் கிண்ணம் (சிறியது 2)<br>சாப்பாட்டுத் தட்டுகள், கரண்டிகள்<br>Keyboard, mouse, speaker<br>அகராதி - தமிழ், ஆங்கிலம்<br>மைக் ஸ்ராண்ட் 1 |

யா/ கொக்குவில் இலங்கை வங்கிக் கிளையில் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் நடைமுறைக் கணக்கை ஆரம்பிப்பதற்கு ஆரம்ப வைப்புப்பணம் இட்டவர்கள்

யா/கொக்குவில் சுப்பிரமணியம் மாலதி சனசமுகநிலையம் ரூபா 5000.00
திருவாளர் M. சுந்திரசேகரம் MITEL ELECTRONIC ENGINEERING SYSTEMS (PVT) LTD.

## பாடசாலையின் தேவைகள்

1. வகை 1, வகை 2 கதிரை மேசைகள்
2. மாணவர் பயன்பாட்டிற்கான கணணித்தொகுதி 03
3. பாடசாலைக்கான புதிய காணி
4. கேட்போர் கூடத்துடனான நவீன வகுப்பறைகள் கொண்ட மூன்று மாடிக் கட்டடம்
5. பாண்ட் வாத்தியக் குழு உருவாக்க தேவையான வாத்திய கருவிகள்.

# யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலை

**மகுட வாசகம் -** கல்வியே அழியாத செல்வம்

## பாடசாலைக் கீதம்

இராகம் - கல்யாணி
தாளம் - ஆதி

கல்விச் சுடரினை ஏற்றுவோம் - நாங்கள்
கல்விப் பேறினை எம்வாழ்வில் போற்றுவோம்
யாழ் கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலை
எம் கல்வி அன்னையே என்றும் வாழ்க - பாலர்கள்
நாங்கள் விருப்புடன் கற்றிடும் கல்விக்கதிபதி எம்முடன்
வாழ்க
எம்மையணைத்து கல்விப் பயிர் வளர்த்து
சான்றோனாக்கும் தாயே வாழ்க

ஆடிப்பாடி மகிழ்சிறார் குழாத்தடன்
ஆசிரியம் திகழ் ஆசான் மகிழ்வுடன்
கலைகளின் வையகம் புகழ்ந்திட என்றும்
எம் கல்வியே அழியாத செல்வம்
கல்வியே என்றும் அழியாத செல்வம்

ஆக்கியவர் - திரு. ந. பரந்தாமன்
இசைமாணி யாழ் பல்கலைக்கழகம்
விரிவுரையாளர்

இசையமைத்தவர் - திருமதி பிறேமினி சபேசன்

# நன்றி நவிலல்

எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த திரு.யோ.ரவீந்திரன் (யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர்) அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

வித்தியாலயத்தின் கல்வித்தர வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் வகையில் கடமையாற்றிக்கொண்டு சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்த திரு. பூ. குகதாசன் ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் யாழ் வலயம் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது பாடசாலையின் நலன்விரும்பியாகிய திரு.கு.அம்பிகைபாகன் கிராமசேவகர் அவர்கள் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தமைக்காக எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது பாடசாலை நலன்விரும்பியும் எமது பாடசாலைக்குரிய கிராமசேவகருமாகிய திரு.ச.பாலசிங்கம் அவர்கள் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்தமைக்காக எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது பாடசாலையின் பயனாளியான திருமதி ராதை பாஸ்கரன் அவர்கள் கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்தமைக்காக எமது நன்றிகள்.

இன்றய பரிசளிப்பு விழாவும் பாராட்டு விழாவும் சிறப்புற நடைபெற பரிசில்கள் வழங்கியவர்கட்கும், ஆசியுரை வழங்கியவர்கட்கும் இவ் விழாவில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றிகள்.

எமது விழாவை வளர்மதி முன்பள்ளி மண்டபத்தில் நடாத்த அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்கிய வளர்மதி நிறைவாழ் வகத்தினருக்கும் நன்றிகள்.

- திருமதி யோகலட்சுமி திரவியநாதன் அதிபர் அவர்களின் பெற்றோர் அமரர் திரு.திருமதி கந்தையா புவனேஸ்வரியின் பெயரில் பரிசில்கள் மதியபோசனம் வழங்கிய சகோதரர் திரு.T.K.இராஜலிங்கம் குடும்பத்தினருக்கும் பரிசில்கள் அன்பளிப்புச் செய்த சகோதரி திரு. திருமதி கந்தையா விஜயராசா பாக்கியா கனடா குடும்பத்தினருக்கும் நன்றிகள்.

எமது பாடசாலையின் பயனாளிகள் அனைவருக்கும் மீண்டும் மீண்டும் நன்றிகள்.

**அதிபர்,**
**யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க**
**பாடசாலை.**

# காலத்தின் குரல்



✲ ஆண்டவனைத் தேடி நீங்கள் எங்கே போகிறீர்கள்? துன்பப்படுபவர்கள் ஏழைகள், பலவீனர்கள்- இவர்கள் எல்லோரும் அத்தனை தெய்வ வடிவங்களல்லவா?

✲ ஏன் இவர்களை நீங்கள் முதலில் ஆராதிக்கக் கூடாது?

✲ இந்த ஏழைகளையே உங்கள் கடவுளாகக் கொள்ளுங்கள்.

*சுவாமி விவேகானந்தர்*

பராசக்தி பிறிண்டேர்ஸ் கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி.